635

மும்மணி

MUMMANI 卐 मुम्मणि

635

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
10 SEP 1947
MADRAS

ஆகஸ்டு 15 1947
மலர் 1 இதழ் 2





...மணி காரியாலயம்.
...ந்தர் தெரு சென்னை. 1

விலை 3 அணா

மும்மணி காப்பாளர்கள்

மஹா ஸம்ரக்ஷகர்

ஸ்வஸ்திஸ்ரீ லக்ஷ்மிஸேன பட்டாரக பட்டாசார்யவர்ய ஸ்வாமியார் அவர்கள், மேல் சித்தாமூர்.

ஸம்ரக்ஷகர்கள்

A. சக்ரவர்த்தி நைனூர். M. A.
புரொபஸர் மதராஸ்.
K. P. பொன்ரங்க நைனூர் தஞ்சூர்.
V. G. சம்பத்ராவ் நைனூர்
மேல் சித்தாமூர்.
அழகப்ப நைனூர். கரடிப்பாக்கம்.

போஷகர்கள்

முதல் இதழிற்குப் பிறகு சேர்க்கப் பட்டவர்கள்

பத்மராஜ பண்டிதர் மேல்சித்தாமூர்
M. சகரவர்த்தி நைனூர் மதராஸ்
V. தேவசந்த்ர நைனூர் நெய்மேலி
தொ. அப்பாண்டை நைனூர்
மேல் சித்தாமூர்.
V. அப்பாண்டைராஜு வாத்தியார்.
கள்ளப்புலியூர்.
வரதராஜு நைனூர் கள்ளப்புலியூர்.
M. நாககுமார நைனூர் V. M. ,,
ஸேட் மோஹன்லால்ஜீ மதராஸ்.
S. D, சின்னத்தம்பி நைனூர்
ரெவின்யூ இன்ஸ்பெக்டர்
சேதியா தோப்பு
ஸ்வயம்பிரபை அம்மாள். கடலூர்
A. குப்புசாமி நைனூர் பொன்னூர்.
ஆ. அப்பாண்டைநாத நைனூர்
பொன்னூர்.

போஷகர் நிதியத்து வாக்களித்தவர்

முதல் இதழிற்குப் பிறகு சேர்க்கப் பட்டவர்கள்

G, பத்மராஜு நைனூர்,
மேல் சித்தாமூர்
S. அப்பாண்டைராஜு நைனூர்
மேல் சித்தாமூர்
A. ராஜேந்த்ர ஜைன். விருதூர்.
அனந்தா ஜைன், ராயப்பேட்டை
ப. துரைசாமி நைனூர் V. M.
மீச நல்லூர்.
அனந்தவிஜய நைனூர் வெண்குணம்
A. S. அம்மு நைனூர்
பெரணமல்லூர்

இவ்விதழில்

	பக்கம்
அருகர் வணக்கம் — பதிப்பாசிரியர்	2
வினவிடைகள் — ஸ்ரீபால வர்ணீஜீ	4
வீரமணி — T J அனந்தராஜ்	8
சித்தன்ன வாசல் — எஸ். ஆர். வெங்கடராமன் பி. ஏ. பி. எல்.	9
தீண்டாமை ஒழிந்தது — S. P. கெம்பீர நைனூர்	17
ஓர் இரவு — வித்வான் வே. லக்ஷ்மணன்.	19
ஆண்மையும் அறிவும் — யசஸ்வதி	22

விண்ணப்பம்

மும்மணியைத் தங்களுக்கு அனுப்பியுள்ளோம் அன்புடன் பெற்றுக் கொண்டு சந்தா தொகையை அனுப்பாதவர்கள் உடனே மணியார்டர் மூலம் அனுப்பவும் இதனைத் தங்கள் நண்பர்களுக்குக் காண்பித்து சந்தா தாரர்களாகவும் போஷகர்களாகவும் சேர்த்து அனுப்பவும்.

மும்மணிக்கு விஷயம் எழுதி அனுப்புவோர் ஆங்கில மாதம் 5 ந்தேதிக்குள் அனுப்பவும்.

மும்மணி ஒவ்வொரு ஆங்கிலமாதத்தின் 15 ந்தேதி யன்று வெளிவரும்.

தனிப் பிரதி	0 3 0	வருடச்சந்தா	2 0 0
போஷகர் நிதி	10 0 0	ஸம்ரக்ஷகர் ஜீவியதனம்	50 0 0

மேனேஜர்
மும்மணி காரியாலயம்.

OFFICE OF THE ... MADRAS 10 SEP 1947

சுதந்திரப் (பாட்டு)

ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே
ஆனந்தசுதந்திரம் அடைந்துவிட்டோம் என்று
(ஆடுவோமே)

எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு—நாம்
எல்லோரும் சமம் என்பதுறுதியாச்சு
சங்கு கொண்டே வெற்றி ஊதுவோமே—இதைத்
தரணிக்கெல்லாம் எடுத்தோதுவோமே
(ஆடுவோமே)

உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்—
உண்டுகளிப்போரை நிந்தனை செய்வோம் [வீணில்
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்.
(ஆடுவோமே)

நாமிருக்கும் நாடு நமதென்பதறிந்தோம்—இது
நமக்கே உரிமையா மென்பதுணர்ந்தோம் இந்த
பூமியில் எவர்க்கும் இனி அடிமை செய்யோம்—பரி
பூரணனுக்கே அடிமை செய்து வாழ்வோம்.
(ஆடுவோமே)

(பாரதியார்)

பாரதத் தாயே நீ ஈவாய் - உன்றன்
பாலர்கள் இன்புறும் வாழ்வருள் கூர்வாய்

நீதி நிலாவுற வேண்டும் - உளம்
நேர்மையும் ஆண்மையும் நேர்வுற வேண்டும்
சாதிச் செருக்கற வேண்டும் - பல
சமயப் பிணக்கறச் சாய்வுற வேண்டும்.
(பாரதத்தாயே)

பெண்கள் மதிப்புற வேண்டும் - நாட்டில்
பேதமை ஏழைமை மாய்வுற வேண்டும்
கண்களே போல எமக்கு - நல்ல
கைத்தொழி லுங்கலை ஞானமும் வேண்டும்.
(பாரதத்தாயே)

எங்கணும் யாரும் வியக்க - நாங்கள்
எல்லாரும் எப்பொரு ளும்பெற வேண்டும்
சிங்கம் எனத்திறல் பெற்றே - எங்கள்
தேசம் விளங்கிச் சிறப்புற வேண்டும்.
(பாரதத்தாயே)

வே. வேங்கடராஜுலு ரெட்டியார்

மஹாத்மா பேசினார்:—

மஹாவீரர் ஒரு சிறந்த மஹான் என்று, எங்கு போற்றப்படினும், அவர் உபதேசித்த அஹிம்சை தான் போற்றப்படுகின்றது. என்று, யான் உண்மையில் மனப்பூர்வகமாகத் தங்களிடம் கூறுகின்றேன்.



எந்தத் தருமம் உயர்வாகக் கருதப்படுகின்றதோ அது "அஹிம்ஸா பரமோ தர்ம" மாக இருக்க வேண்டும். அஹிம்ஸையை அதிகமாக இவ்வுலகில் பரப்பியவர் யார் என்றால் மஹாவீரர் தான்.

"ஜைன் ஜகத்"
மாதப் பத்திரிகை
வார்தா

பாரத சுதந்திரம் பாரினில் முழங்கிட
பேரிகை கொட்டிட வாரீர்! வாரீர்!!

அஹிம்ஸா பரமோ தர்மத்தைப் போதித்த மஹாவீரர்.

—::○::—

வாழ்க! மஹாத்மா

காந்திஜீ ஒரு புனித ஆன்மா என்பது இவ் வுலகின் கண் உள்ள மாந்தர்கள் அனைவருக்கும் தெரியும். இவர் இளமையிலிருந்தே அறிவும், ஆற்றலும், ஒழுக்கமும் பெற்றிருந்தார் என்பதைப் பல பத்திரிகை வாயிலாகவும், கட்டுரைகளினாலும், ஜீவியசரிதங்களினாலும் மக்கள் அறிந்திருக்கின்றனர். இவர் மனத்தில் உதித்த அஹிம்ஸையே இவருடைய முன்னேற்றத்திற்கும், இன்று நம் முன் தோன்றும் சுதந்திரத்திற்கும் காரணமாயிருந்ததாகும். அஹிம்ஸையினால் வெற்றி பெற்று சுயராஜ்யத்தை நிலைநாட்டி வைத்தார்.

"கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
யெல்லா வுயிருந் தொழும்."

என்ற குறளாசிரியருடைய "பொய்யா மொழி" இன்று, நம் எதிரில் மஹாத்மாவை நமக்கு விளக்கிக் காட்டி நிற்கின்றது.

"கொல்லா விரதத்தைக் குவலயத்திற்குக் கூறிய கொற்றவன் (இறைவன்) வாழ்க."

"கொல்லா விரதம் குவலய மெல்லாம் ஓங்குக"

"மஹாவீரர்கொள்கையாகிய கொல்லாமை யெனும் விரதத்தை மா பெருந் திண்மையோடு அனுஷ்டித்து வரும் மஹாத்மாஜீ மன்னி வாழ்க இம் மானிலத்தில்."

ஸ்ரீ

வந்தே ஜினவரம்

卐 மும்மணி 卐

மலர் 1 | ஆகஸ்டு 15 உ 1947 | இதழ் 2

"மும்மணி" என்பது மூன்று சிறந்த பொருள்களை ஒருங்கே ஒரு பெயராக அழைத்தற்கு உரிய சொல்லாக அமைந்தது. "மும்மணி" என்பது மூன்று பொருள்களைப் பற்றிக் கூறவந்த சொல்லாகும். அம்மூன்று பொருள்களும் உலகில் சிறந்து மக்களிடையே பொருந்தி, நன்மையைத் தரும் இயல்பை உடையனவாகலின், அவற்றை மக்கள் போற்றிப் புகழ்ந்து "மும்மணி" என அழைக்கலாயினர்.

அம் மூன்று பொருள்களாவன:—

நற் காட்சி (ஸம்யக் தர்சனம்)
நன் ஞானம் (ஸம்யக் ஞானம்)
நல் லொழுக்கம் (ஸம்யக் சாரித்ரம்)

"மெய்ப் பொருடேறுத னற்காட்சி யென்றுரைப்ப
ரெப்பொருளுங் கண்டுணர்தார்."

"மெய்ப் பொருள் தேறுதல் நற்காட்சி" உலகில் பலவகைத் தோற்றங்களால் உண்டாகும் பொய்ப்பொருள்களின் தன்மைகளை நீக்கி, அவ்வப்பொருள்களின் உண்மைத் தன்மைகளை உணர்ந்தபடி அவற்றை நிச்சயித்தல் (நம்புதல்) நற்காட்சி என்பதாம்.

"பொருணின்ற பெற்றியைப் பொய்யின் றுணர்தல்
மருளறு நன் ஞான மாண்பு."

பொருள்களின் உண்மைத் தன்மைகளை உள்ளபடி உணர்தல் நன் ஞானமாகும்.

"அறிவு என்பது துன்பந்துடைத்தல்" இது தக்கது தகாதது என்று பகுத்தறிந்து தக்கதையே கொள்ளுதல் அறிவெனப்படும். உயிர்களுக்குண்டாகும் துன்பத்தை நீக்குதற்கு ஏதுவாயுள்ளதே அறிவு.

"காட்சி யுடையார் வினைவரும் வாயிலின்
மீட்சியா நல்லொழுக்கு நன்று."

வினைவரும் வாயிலாகிய கொலை முதலிய பாபச் செயல்களைச் செய்யாமல் விடுதல் நல்லொழுக்க மாகும்.

திருக்குறளாசிரியர் இயற்றிய

அருகர் வணக்கம்

=○=

1. அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு.

2. கற்றதனு லாய பயனென் கொல் வாலறிவன்
நற்ருடொழா அ ரெனின்.

3. மலர் மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ்வார்.

4. வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

5. இருள் சேரிருவினையுஞ் சேரா விறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு.

(1) உலக மக்கள் உயிர் வாழ்தற்குரிய வழிகளை ஆதியில் அருகபகவானுகிய விருஷப தேவர் மக்களுக்குப் போதித்தார். அதனுல். "ஆதிபகவன் முதற்றே உலகு" என்று குறளாசிரியர் கூறியுள்ளார். என்று கொள்க.

ஆதிபகவனை யருக்னை (திருக்கலம்பகம்)
ஆதிபகவன் அசோக வசலன் (திருப்பாமாலை)
ஆதிபகவன் அருளே சரணம் (தோத்திரத்திரட்டு)

என்று ஜைநப் பெரியோர்கள் அருகபகவானை ஆதிபகவன் என்னும் பெயரால் வணங்கி யிருத்தலைக் காண்க.

"பகவானே, எங்களுக்கு ஜீவநோபாயமாகிய ஸஸ்யங்களும், விருக்ஷங்களும் முன்புபோல் இப்பொழுது தாமே விளைகின்றன வில்லை. அவை விளையாமையின் பசி எங்களை மிகவும் வருத்தா நின்றது. மற்றும் வெயிலும் மழையும் காற்றும் குளிரும் பனியும் முதலாயினவற்ருல் மிகவும் வருந்தா நின்றேம். இவையெல்லாம் தீர்க்கும் உபாயம் எங்களுக்கு அருளிச்செய்ய வேணும், என்று இவ்வண்ணம் விண்ணப்பம் செய்ப, கேட்டருளிய *பகவானும் தனக்கு ஸ்வபாவமாகிய கருணையால் 'அஞ்சன்மின்' என்றருளிச் செய்து, இவர்கள் வருத்தம் தீர்க்கும் உபாயத்தினை திவ்யஞானத்

---

* விருஷப தேவன் இக்ஷ்வாகு வமிசத்து அரசன் நாபிராஜ மன்னனின் மகன். அவன் அரசுரிமையை நடத்திவருங்கால் உலகமக்கள் அவனிடம் சென்று, தம் குறைகளைக் கூறிக்கொண்டனர். அவர்கள் கூற்றுக்கிணங்கி, அரசனது கடமைப்படி அறு தொழிகளையுங் காட்டி, அவற்றை நடத்தும் முறையும் கூறினன்.

தாற் பார்த்தருளி, ஷட்கர்மத்தினையும் வர்ணாச்ரம வ்யவஸ்தைகளையும் பண்ணிக்கொடுப்போம் என்று திருவுள்ளம் செய்தனன்." என்று ஸ்ரீ புராணம் கூறுகின்றது.

'அ' என்னும் ஸ்வர (உயிர்) எழுத்து முதல் 'ஹ' என்னும் வ்யஞ்சன (மெய்) எழுத்து வரையில் உள்ள எழுத்துக்கள் அனைத்தையும் அருக பகவானாகிய விருஷப தேவர் முதன் முதல் உலகிற்கு ஓதிவைத்தார். அவர்காலந் தொடங்கியே எழுத்துக்களைப் பயிலும் முறையும் உலகின்கண் பரவியது.

"ஒரு முறையே எழுத்தினையும் எண்ணினையுங் காட்டியருளினன்"

"பிராம்மி என்னும் பெண்பிள்ளைக்கு அகாராதி ஹகாராந்தமாகிய ஸ்வரமும் வ்யஞ்சனமும் என்னும் இரண்டு பேதத்தினையுடைத்தாகிய அக்ஷரமாலையினையும், அக்ஷரங்களது பிறப்பினையும் உபதேசித் தருளினன்." (ஸ்ரீபுராணம் கூறுகின்றது.)

(2) முற்றும் உணரும் தன்மையினையுடைய கேவலக் ஞானத்தைப் பெற்று, பொருள்களின் உண்மைத் தன்மைகளை உள்ளபடி உணர்ந்து, அவற்றை உலகுக்கு அறிவித்தவனாகிய அருக பகவானுக்கு வாலறிவன் என்னும் பெயரும் உண்டாயிற்று.

ஜைந சமய ஆசிரியர்கள் பலநூல்களில் அறிவன் என்னும் பெயரினால் அருகபகவானை வணங்கி யிருத்தலை

"வினையின் நீங்கி விளங்கிய வறிவன்" (தொல்காப்பியம்)
"அறிவன் அறவோன் அறிவுவரம் பிகந்தோன்" (சிலப்பதிகாரம்)
"அறிவின லறியாத அறிவனீ" (மேருமந்தரம்)

என்பன வற்றால் அறிக.

(3) அருக பகவான் அறஉரை ஆற்றும் இடம் ஸமவ சரண மண்டலம் எனப்படும். அம்மண்டலத்தின் நடுவில் கந்தகுடி மண்டபம் இருக்கின்றது. அதன் நடுவில் திரி மேகலா பீடம் ஒன்று உளது. அப்பீடத்தில் தாமரைமலர் அமைக்கப் பெற்றிருக்கும். அத் தாமரை மலர்மீது தம் அடிபடாமல் நான்கு அங்குல உயரத்திற்கு மேல் பகவான் நின்று அறவுரை ஆற்றுவார். அவர்* அறஉரை ஆற்றுதற்கு ஓரிடத்தைவிட்டு மற்றோரிடம் செல்லும் போது, அவர் செல்லும் வழியில் தேவர்கள் தாமரை மலர்களை மங்கலநிமித்தமாக அமைக்க, அவற்றின் மேல் அவர் சென்றதனால், அவ்வருக பகவான் "மலர் மிசை ஏகினான்" என்று குறளாசிரியரால் கூறப்பட்டார்.

"மலர் மிசை நடந்தோன் மலரடி யல்லது" (சிலப்பதிகாரம்)
"விரி பூந்தாமரை மேற் சென்ற திருவாரடியேத்தி"
(சீவகசிந்தாமணி)

---

* அற உரை ஆற்றுதற்கு அருகபகவான் மற்றோர் இடத்திற்குச் செல்லும்போது கந்தகுடி மண்டபம் மாத்திரம்அவருடன் செல்லும் என்பர்.

"பூவின்மேல் சென்றான் புகழடியை" (அறநெறிச்சாரம்)
என்ற தொடர்களை அருகபகவானை மலர் மிசை ஏகினன் என்று திருக்குறளாசிரியர் கூறியதற்கேற்ப ஒப்பு நோக்குக.

(4) விருப்புக்கும் வெறுப்புக்கும் மூலகாரணமாகிய மோஹநீய கருமத்தை வென்ற பகவானுக்கு இராகம் துவேஷம் ஆகியவை இன்மையினால் பொருள்களின் மீது விருப்பும் வெறுப்பும் தோன்றுதலில்லை. அதனால், வேண்டுதல் வேண்டாமையிலான் என்றதும் அருகபகவானுக்குப் பொருத்தமானதாகும்.
"வேண்டுதல் வேண்டாமை யில்லாத வீரனடி" (திருக்கலம்பகம்)
"விருப்பும் வெறுப்பும் வெறுத்தாய் போற்றி" (திருப்பாமாலை)
என்பன வற்றால் அருகபகவானை வணங்கி யிருத்தலையும் காண்க.

(5) "குற்ற மொன்றின்றிக் குறையின் றுணர்ந்தறம்
பற்ற வுரைத்தானிறை" (அருங்கலச்செப்பு)
என்றபடி, வினையினீங்கி, விளங்கிய அறிவுபெற்று, உலக மக்களுக்கு அறத்தை அறிவித்தவரும், ஆதிபகவானுமாகிய விருஷப தேவர் என்னும் அருக பகவானை இறைவன் என்று குறளாசிரியர் கூறியுள்ளார்.

பொன் தளையும் இருப்புத்தளையும் பந்தனத்திற்குக் காரணம் ஆதல் போல, நல் வினையும் தீவினையும் பிறவிப் பந்தனத்திற்குக் காரணமாகும் என்று, அவற்றின் உண்மையினைத் தம் வாலறிவுடைமையினால் அறிந்து, அவற்றையும் அவற்றிற்குக் காரணமாகிய செயல்களையும் விட்டு, குற்றமற்ற பதவியை அடைந்த இறைவன் ஆவார் அவர். அத்தகைய இறைவனை அடைந்தார்க்கு இருள் சேர் இருவினையும் சேரா என்பது கருத்து.

இறைவன் என்பது ஜைன சமயக் கொள்கை படிப் பஞ்ச பரமேஷ்டிகளுள் ஒருவராகிய ஆசாரியரைக் குறிக்கின்றது எனினும் அமையும்.

7-ஆம் பக்கம் தொடர்ச்சி

28. வேதநீயம் என்பது என்ன?

உயிர்கள் துக்கத்தை அனுபவிப்பதற்குக் காரணமாயுள்ளது, அஸாதா வேதநீயம் எனப்படும்.

உயிர்கள் சுகத்தை அனுபவிப்பதற்குக் காரணமாயுள்ளது, ஸாதா வேதநீயம் எனப்படும்.

"உயிர்களுக்கு சுக துக்கங்களைத் தருவது வேதநீயம்."

நிமித்தகாரணம் உபாதான காரணம், எனக் காரணம் இருவகையாகும். அவற்றுள் வேதநீயம் உபாதான காரண மாகும்.

உபாதான காரணம் :—முதற் கருவி.

நிமித்த காரணம் :—துணைக் கருவி

வினா விடைகள் * *

(ஸ்ரீபால வர்ணீஜீ)

11. இறைவன் என்று யாருக்குப் பெயர்?

குற்றங்களின் நீங்கி, குறையின்றி அறத்தை உணர்ந்து, அதனை அறிவித்தவன் இறைவன்.

ஆதியில் இவ்வுலகிற்கு எழுத்தை அறிவித்தவராகிய ஆதிபகவானை (விருஷபதேவரை) இறைவன் என்பர்.

"குற்ற மொன்றின்றிக் குறையின்றுணர்ந்தறம்
பற்றவுரைத்தானிறை"

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்"

12. துறவி என்பார் எத்தகையார்?

அகப்பற்று புறப்பற்றுக்களைப் பற்றறத் துறந்தவர் துறவி எனப்படுவர்.

"துறந்தவர் துறவி"

அகப்பற்று என்பது ஆசை, வெகுளி, மயக்கம் முதலியன.

புறப்பற்று என்பது மனைவி, மக்கள், வீடு, நிலம் முதலியன.

13. நிர்க்ரந்தர் என்பார் யாவர்?

நிர்க்ரந்தர் என்னும் சொல் வடமொழி. "க்ரந்த:" என்றால் பற்று. நி: என்பது நீக்கியவர் என்னும் பொருள் பெறும். பற்றை நீக்கியவர் நிர்க்ரந்தர் ஆவர்.

"பற்றற்றவர் நிர்க்ரந்தர்"

14. வீதராகன் என்று யாருக்குப் பெயர்?

உலகில் உள்ள பொருள்களின்மீது விருப்பும் வெறுப்பும் அற்றவன்.

"ஆசை யற்றவன் வீதராகன்"

15. பரமாத்மா என்று யாருக்குப் பெயர்?

வினையின் நீங்கி நிர்மலமாகிய நிலையை யடைந்தவர் பரமாத்மா.

"பரம பதத்தையடைந்தவர் பரமாத்மா"

16. பரஞ்ஜ்யோதி என்று யாருக்குப் பெயர்?

கேவல ஜ்ஞானமாகிற குன்றாத ஒளியை உடையவர். அவ்வொளியில் முக்காலத்திலும் மூவுலகத்திலும் நிகழும் நிகழ்ச்சிகளும், நிலையான பொருள்களும் ஒருங்கே பிரதிபலிக்கும்.

"உலகெலாம் பரவிய ஞானஜ்யோதியையுடையார் பரஞ்ஜ்யோதி"

17. ஸர்வஜ்ஞன் என்பவர் யார் ?

உலகில் உள்ள பொருள்களையும், அவைகளின் மாறுதல்களையும் முற்றும் குறைவின்றி அறியும் அறிவுடையார் ஸர்வஜ்ஞன் எனப்படுவர்.

"ஸர்வத்தையும் அறிபவன் ஸர்வஜ்ஞன்"

18. ஸித்தர் என்பவர் யார் ?

காதி அகாதி என்னும் இருவினைகளையுங் கெடுத்து, எண்குணங்களையும் பெற்று அமரநிலையில் இருப்பவர்.

"ஸித்தியைப் பெற்றவர் ஸித்தர்"

ஸித்தி என்பது வீட்டுபேறு.

19. காதிவினை என்பது என்ன ?

ஆத்மாவினது இயற்கைத் தன்மையினைக் கெடுத்தற்குரிய கருமம். காதிவினை யெனப்படும்.

ஞானவரணீயம், தரிசனவரணம், மோஹநீயம், அந்தராயம் ஆகிய இவை நான்கும் காதிவினை"

"கெடுப்பது காதி வினை"

20. அகாதிவினை என்பது என்ன ?

ஆத்மாவினது தன்மையினைக் கெடுக்கும் குணமற்றது அகாதிவினை யாகும். ஆயுஷ்யம், நாமம், கோத்ரம், வேதனீயம் ஆகிய இவை நான்கும் அகாதி வினை.

"கெடுக்கும் சக்தியற்றது அகாதிவினை"

21. ஞானவரணீயம் என்பது என்ன ?

பிம்பத்தின் மீது போர்த்த துணி அப்பிம்பத்தினது உருவத்தை மறைத்தல் போல, அறிவை மறைக்கும் தன்மை யுடையது ஞானவரணீயம்.

"ஞானத்தை மறைப்பது ஞானவரணீயம்"

22. தரிசனவரணீயம் என்பது என்ன ?

ஒருவன் முயன்று பிறரைக் காணச் சென்றும் அவரைக் காண்பதற்கு விடாமல் காவற்காரன் தடுத்தல் போல, பொருள்களினது இயற்கையைக் காணமுடியாமல் தடுப்பது தரிசனவரணீயம்.

"தரிசனத்தை தடுப்பது தரிசனவரணீயம்"

23. மோஹநீயம் என்பது என்ன ?

மதுவை உண்டவன் மயங்கி வீழ்தல் போல, உலக வாழ்க்கையில் ஈடுபட்டு, ஆத்மாவினது இயற்கையை

மறந்து, பிறப்பொருள்கள்மீது மோகம் செலுத்தி மயங்கி இருத்தற்குரிய கருமம்.

"மோஹத்தை விளைப்பது மோஹநீயம்"

24. அந்தராயம் என்பது என்ன ?

ஆரம்பித்த காரியத்திற்கு விக்னம் உண்டு பண்ணும் இயற்கை யுள்ளது அந்தராயம்.

"விக்னம் செய்வது அந்தராயம்"

25. நாமம் என்பது என்ன ?

அழகிய உருவம், இனியகுரல், மனோகரமானநடை முதலியன உண்டாதற்குக் காரணமாகிய கருமம் சுபநாமம் எனப்படும்.

பார்வைக்கு அழகற்ற உருவம், விகாரமானநடை, வறட்டுப்பேச்சு முதலியன உண்டாதற்குக் காரணமாகிய கருமம் அசுபநாமம் எனப்படும்.

26. ஆயுஷ்யம் என்பது என்ன ?

ஒவ்வொரு ஜீவனும், தன்வினைப்பயன்படித்தான் பெற்ற கால அளவு வரையில் உயிர் வாழ்தற் குரியது ஆயுஷ்யம்.

சிறையில் அகப்பட்டுள்ள ஒருவன், அவனுக்கு விதிக் கப்பட்ட காலஅளவு வரையில், அச்சிறையில் அவன் இருத்தற்கு அதிகாரியினது ஆணை (ஆக்ஞை) காரண மானது போல, உயிர் வாழும் (ஸம்ஸாரி) ஜீவன் ஒவ் வொன்றும் தன் தன் வினைப்பயன்படி ஒவ்வொரு உட லைத் தரிக்கின்றது. அவ்வுடல் இவ்வளவு காலம் வரைக் குந் தான் இருக்கும் என்ற கால அளவும் ஏற்பட்டு விடு கின்றது. அக்கால அளவு வரைக்கும் ஜீவனை வெளியில் நீங்கவிடாமல் அவ்வுடலிலேயே இருக்கச் செய்வது ஆயுஷ்யம்.

"அளவு காலம் வரைக்கும் இருக்கச் செய்வது ஆயுஷ்யம்"

27. கோத்ரம் என்பது என்ன ?

எல்லோராலும் இவர் நல்லவர் என்று போற்றப் படுதற்குரிய வம்சத்தில் பிறத்தற்குக் காரணமானது உச்சைர் கோத்ரம் எனப்படும்.

ஜீவராசிகளுக்குள் இது தாழ்வானதெனக் கருதப் படுவதற்குக் காரணமானது நீசைர் கோத்ரம்.

(4-ஆம் பக்கம் பார்க்க.)

... வீரமணி ...

T. J. அனந்தராஜ் IV F. ஜைன் ஹைஸ்கூல் மதராஸ்.

மஹாவீரர் என்பவர் யார் என்று உங்களுக்குத் தெரியுமா? அவர்தான், ஜைனசமயத்தினுள் கூறப்படும் இருபத்திநான்கு தீர்த்தங்கரருள் கடைசியானவர். அவரை வர்த்தமானர் என்றும் கூறுவர். அவர்தான் இவ்வுலகில் அஹிம்ஸா பரமோதர்மத்தை மக்களுக்குப் போதித்தவர். பார்ஸ்வதீர்த்தங்கரர் முக்தியடைந்த பின்னர் இடையே தர்மம் கெட்டு ஹிம்ஸையே முக்கியமாக எங்கும் பரவியிருந்ததைத் தர்மோபதேசத்தினால் ஹிம்ஸையை நீக்கியவரும் அவரே. ஜைந தர்மத்தைக் கடைசியாக உலகில் பரப்பியவரும் அவரே. அவர் விதேஹதேசத்து (தற்போதைய பீஹார் மாகாணத்து) குண்டலபுரம் என்னும் நகரத்தை ஆண்டுவந்த ஸித்தார்த்தமன்னனின் மகன். அவர்தாய்பெயர் பிரியகாரிணி. அவர் சித்திரைமாதம் உத்திர நக்ஷத்திரத்தன்று பிறந்தார். அவர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து, குழந்தைப் பருவம் நீங்கி, பாலபருவம் அடைந்தார்.

ஒருநாள், அவர் பாலர்களோடு கூடி மரத்தின் மேல் ஏறி விளையாடிக்கொண்டிருந்தார்.

அவர் தைரியத்தைப் பரீக்ஷை செய்வதற்காகச் சங்கமன் என்னும் ஒருதேவன், பாம்பின் உருவந்தாங்கி, அம் மரத்தின் அடியிற் சுற்றிக் கொண்டான். அதனைக் கண்ட பாலர் அனைவரும் பயந்து, மரத்தின் நுனிக்கிளையிலிருந்து குதித்து, விழுந்தடித்து ஓடினர். தூரத்தில் நின்று வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தனர். நம் வர்த்தமானர் மாத்திரம் அவ்வாறு செய்யவில்லை. அப்பொழுது அவர் என்ன செய்தார் தெரியுமா? அந்தப் பாம்பின் படத்தின்மேல் ஏறி நின்று விளையாடிக் காட்டினார். அது கண்ட தேவன் வியந்து, தன் சுய உருவங் கொண்டு, அவரைப் போற்றிப் புகழ்ந்து மஹாவீரன் என்னும் திருநாமம் இட்டுச் சென்றனன். அவர் பல நற்காரியங்களைச்செய்து இவ்வுலகில் வீரமணியாக விளங்கினார்.

சிறுவர்களே! நீங்களும் மஹாவீரரைப்போல் வீரர்களாகி நம் நாட்டைச் சிறப்புறச் செய்வீர்களாக!

"கொல்லாவிரதம் குவலயமெல்லாம் ஓங்குக"

சித்தன்ன வாசல்

எஸ். ஆர். வேங்கடராமன், பி. ஏ., பி. எல்.

(சென்ற இதழ் தொடர்ச்சி)

காளிதாஸன் எழுதியுள்ள விக்ரமஊர்வசி என்ற நாடகத்தைத் தழுவி மஹேந்திரவர்மன் வேறு ஒரு நாடகத்தையும் எழுதினான். ஓவியத்தில் ஒரு நான்காவது வருணத்தைக் கண்டு பிடித்தானும். அதனால் அவனுக்கு 'வர்ண சதுர்த்தா' என்ற பேரும் உண்டு. வர்ணங்களை எப்படிச் சேர்ப்பது என்பதைப்பற்றி 'வர்ண சந்த்ரார்னவம்' என்ற ஒரு நூலையும் எழுதினானும். மஹேந்திர வர்மனுக்குச் சித்திரக்காரபுலி என்றும் பெயர் இருந்ததாகத் தெரிகிறது. இந்தச் சித்தன்ன வாசலின் பெருமைக்கு மஹேந்திரவர்மன்தான் காரணம்.

கல் சுவற்றில் சாந்து பூசி எழுதும் சித்திரத்திற்குச் சுதைச் சித்திரம் என்று தமிழில் சொல்லுகிறார்கள். முத்ரா ராக்ஷஸம் என்ற சமஸ்கிருத நூலில் இதற்கு பிட்டி சித்ரா (Bitti Chitra) என்று பெயர். ராஜசேகரன் என்ற கவி (900 கி. பி.) அரசர்களின் சபையில் கவிகளும் 'சித்ர லேப்ய க்ருத்' என்ற ஓவியக்காரர்களும் சரிசமானமாக உட்கார்ந்தார்கள் என்று சொல்லுகிறார். சித்தன்ன வாசலில் உள்ள ஓவியங்கள் அம்மாதிரியான பிட்டிச் சித்திரங்கள்தான். ஆனால் ஆங்கிலத்தில் அதை பிரஸ்கோ என்று சொல்லுகிறார்கள். முன் காலத்தில் சுதைச் சித்திரங்களை அரச குடும்பத்தாரும் பிரபுக்களின் குடும்பத்தாரும் எழுதி வந்ததாகத் தெரிகிறது. இது ஒரு உயர்ந்த கலை என்று எல்லாரும் எண்ணினார்கள். இத்தகைய பிரசித்தி பெற்ற கலாரசம் ததும்பும் படியான சித்தன்ன வாசலையும், மாமல்ல புரத்து ரதங்களையும் நிறுவினவன் மஹேந்திரவர்மன். இவை தமிழ்நாட்டின் அழியாச் சிற்ப ஓவியப் பொக்கிஷங்கள்.

சித்தன்னவாசல் குகையைப் பார்த்ததும் எனக்கு ஒரு ஏமாற்றம். குகை மிகவும் சிறிதாக இருந்தது. எல்லாம் சேர்ந்து 20 அடி சதுரம் இருந்தால் அதுவே ஜாஸ்தி. இந்த 20 சதுர அடி இடம் உலகப்பிரசித்தி பெற்றிருப்பதைப் பாருங்கள். குகைக்கு வெளியில் அந்தமும் அழகும் இல்லாத கல்லினால் கட்டப்பட்ட ஒரு மொட்டை மதில். இது ஒரு மாட்டுத் தொண்டுப்பட்டியோ என்று முதலில் சந்தேகித்தேன். மதில் கட்ட வேண்டியிருந்தால் ஓவியக்கலையின் சிறப்பிற்கு இடமான அந்த குகையின் முன்புறத்தில் இன்னும் அழகாக மதிலைக்கட்டியிருக்கலாம். அதைக் கட்டியவன், ஒரு கலாரசிகன் அல்லன்; வீடுகட்டுபவன், சாதாரண

வேலைக்காரன் என்பதைக் காட்டுகிறது. அது சித்தன்னவாசலுக்கு ஏற்றதாயில்லை. சமயம் வரும்போது புதுக்கோட்டை சமஸ்தானத்து அதிகாரிகள் இந்தக் குறையைத் தீர்ப்பார்கள் என்று நினைக்கிறேன். இம்மதிலை எதற்காகப் போட்டார்கள் என்று விசாரித்தேன். மதில்களை எழுப்புவதற்கு முன்பு அறிவிலிகள், துஷ்டர்கள் இடைப்பையன்கள் இவர்களெல்லாம் குகைக்குள் புகுந்து சுதைச் சித்திரத்திற்கும் சிற்பத்திற்கும் தீங்கிழைத்தார்களாம். அதைத்தடுக்கவே இந்த மதில்களை எழுப்பி ஒரு கதவை வைத்துப் பூட்டுப் போட்டிருக்கிறார்கள். அதற்கு ஒரு காவற்காரனும் அங்கே இருக்கிறான். குகையைப் பார்க்க வருபவர்களுக்கு அவன் கதவைத் திறந்து விடுகிறான்.

இந்த மதிலைத் தாண்டி உள்ளே சென்றால் சுமார் 6 அடி தூரத்தில் குகை இருக்கிறது. குகையின் வெளியிலும் இரும்பு கழிகளையும் வலைகளையும் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறார்கள். கதவைத் திறந்துகொண்டு உள்ளே சென்றால் தாழ்வாரத்தில் நான்கு கல்தூண்கள் இருக்கின்றன. அவை குகையின் கூரையைத் தாங்கி நிற்பது போலிருக்கிறது. கல்தூண்களின் மேல்பாகமும் கீழ்பாகமும் சுமார் $1\frac{1}{2}$ அடி சதுர அளவுள்ளவை. நடுபாகம் எட்டுக் கோணமுள்ளது. இதை யொட்டியதுதான் வெளி மண்டபம். இதன் சுவற்றின் ஒரு கோடியில் யோக நிலையில் ஒரு ஜைன தீர்த்தங்கரர் வீற்றிருக்கிறார். அதற்கு நேர் எதிரிலுள்ள சுவற்றில் ஐந்து தலை நாகத்தின் கீழ் உட்கார்ந்திருப்பவர் ஜைனர்களின் 23 தீர்த்தங்கரரான பார்ஸ்வநாதர். இவ்விரு சிற்பங்களும் வெகு அழகானவை. வேலைப்பாடுடையவை. அங்கலக்ஷணங்களெல்லாம் நன்றாக அமைந்திருக்கின்றன. நிமிர்ந்து உட்கார்ந்திருக்கும் தோரணை பார்ப்பதற்கு ஒரு கம்பீரத்தையும் அழகையும் கொடுக்கிறது. வெளிமண்டபத்தின் உட்சுவரின் நடுவில் அர்த்த மண்டபத்திற்குச் செல்லும் வாயில் இருக்கிறது. அதற்கு இரண்டு படிகள் உண்டு. படிகளின் இரண்டு பக்கத்திலும் இரண்டு சுருள் யாளிகள் இருக்கின்றன. இந்த வாயிலைக் கடந்து உள்ளே உள்ள சதுர அர்த்த மண்டபத்தை அடையலாம். நமக்கு எதிரிலுள்ள சுவரில் மூன்று உருவங்கள் உட்கார்ந்திருப்பதைப் பார்க்கலாம். அம்மாதிரியே நமது இடப்பக்கத்திலும் வலப்பக்கத்திலும் உள்ள சுவர்களில் இரண்டு உருவங்களைப் பார்க்கலாம். இவ்வுருவங்களெல்லாம் காலை சப்பணம் போட்டு ஒரு கையின் உள்ளங்கையை மற்றொரு உள்ளங்கையின்மீது இருக்கும்படி மடியில் வைத்து உட்கார்ந்திருக்கின்றன. ஜைன மதத்தீர்த்தங்கரர்கள் இவ்விதம் தான் உட்கார்ந்திருப்பார்களாம். இவைதான் சித்தன்ன வாசலில் உள்ள சிற்பங்கள்.

ஆனால் சித்தன்னவாசல் ஓவியத்துக்குத்தான் பேர் போனது. அதைப்பற்றிச் சில வார்த்தைகள் நான் அவசியம் சொல்லவேண்டும். ஓவியம் தீட்டும் கலையைப் பற்றியும் சில வார்த்தைகள் அவசியம். குகையைக் குடைந்தபின் அதன் எல்லாச் சுவர்களையும் மேடுபள்ளமில்லாமல் சமமாகக் கொத்துவார்கள். பிறகு அதன் மீது உமியும் புல்லும் சேர்த்துச் செய்த ஒரு சாந்தை முதலில் பூசுவார்கள். அதன்மேல் மறுபடியும் சுண்ணும்பும் மணலும் சேர்ந்த சாந்தை அரைக்கால் அங்குல கனத்திற்குப் பூசுவார்கள். பிறகு அதன்மீதுதான் சிவப்பு, மஞ்சள், நீலம், பச்சை, கருப்பு, வெள்ளை வர்ணங்களால் சித்திரங்களைத் தீட்டுவார்கள். இதுதான் சுதைச் சித்திரம் என்பது. சித்தன்னவாசலிலுள்ள ஓவிய வர்ணப்பூச்சு கலப்பு, இவை நன்கு இசைந்திருக்கின்றன. ஓவியங்கள் இயற்கையாக இருக்கின்றன. பார்த்தவுடன் மனதுக்குச் சந்தோஷத்தையும் ஒரு விதமான திருப்தியையும் அமைதியையும் கொடுக்கின்றன. ஓவியங்களை யெல்லாம் கோடுகளைக்கொண்டே பாவம் பொலியும்படி எழுதியிருக்கிறார்கள். அந்தக் கோடுகளின் வீச்சும், பரப்பும், வளைவும், அழுத்தமும் ஓவியக்காரர்களின் திறமையை எடுத்துக் காட்டுகின்றன.

இந்தக் குகை முழுதும் ஒரு சமயத்தில் கல்சுவர் தெரியாமல் இருக்கும்படி ஓவியங்களை சமண ஓவியக்காரர்கள் மஹேந்திரவர்மனின் ஆணைப்படி சுவற்றில் தீட்டியிருந்தார்கள் என்பதற்கு குகை எங்கும் ஆங்காங்கு சாந்தின் அடையாளங்களை நாம் இன்றைக்கும் காணலாம். இவை யெல்லாம் என்னவாயின என்று வாசகர்கள் கேட்கலாம். இந்த ஓவியங்களை சென்ற 1300 வருஷமளவும் யாரும் கவனிக்கவில்லை. அங்குள்ள மாடு மேய்ப்பவர்கள் வெய்யிலுக்கு குகையில் தங்குவது வழக்கம். வேடிக்கையாகச் சிலர் புலிக்கரம் என்ற புலியும் வெள்ளாடும் போன்ற விளையாட்டுகளை விளையாடியிருப்பார்கள். மாடுமேய்க்கும் பையன்களில் சேஷ்டையுள்ளவர்களில் சிலர் விளையாட்டாக சாணத்தால் செய்த உருண்டைகளையும் மண் உருண்டைகளையும் குகையில் உள்ள ஓவியங்களைக் குறிவைத்தடித்திருக்கின்றார்கள். அதில் சரியாகக் குறிப்பார்த்தடித்தவனை மற்றவர்கள் புகழ்ந்து வேறு சிலர் அவனோடு போட்டா போட்டி போட்டு சாணஉருண்டைகளை ஓவியத்தின்மீது வீசியிருக்கலாம். மற்றும் சிலர் தம் கையிலிருக்கும் கோல் கத்தி இவற்றைக்கொண்டு அவற்றிலிருந்த சாந்தைக்கீரி எடுத்து நாசம் செய்திருக்கலாம். இது மாத்திரமல்ல. யாத்ரிகளும் இக்குகையில் வழித்தங்குவது சகஜம். அப்போது குளிர்காலத்தில் குளிர்காயவும், சமையல் செய்யவும் மலையில் உள்ள சுள்ளிகளைச் சேகரித்து அடுப்பு மூட்டிச் சமைப்பார்களாம். அடுப்பின் புகை அறையில் சூழ்ந்து கூரையின் மீதுள்ள ஓவியத்தின்மீது படிந்து அவற்றின்

அந்தத்தை அழித்திருக்கிறது. இவர்களெல்லாம் படிக்காதவர்கள். அறிவிலிகள். இவர்களின் அட்டூழியத்தைக் கண்டு நாம் கோபங் கொள்வது சகஜம். ஆயின் படித்தவர்கள், இந்த ஓவியச்சிறப்பை அறிந்தவர்களும்கூட அறிவிலிகளைப்போல் நடந்துகொண்டிருப்பதுதான் வருத்தமாயிருக்கிறது. சித்தன்னவாசலின் ஓவியத்தைப் பார்க்க வருபவர்கள் அங்கே வந்து பார்த்ததற்கு அடையாளமாக திருப்பதியிலிருந்து லெய் வடை வாங்கி வருவதுபோல் சுவற்றிலுள்ள ஓவியங்களின் சில்லுகளை பெயர்த்தெடுத்துச் செல்வது ஒரு தர்மகாரியம் என்று செய்தார்களாம். இத்துடன்கூட ஸென்ஸஸ் கணக்கெடுப்பவர்கள் சித்தன்னவாசல் குகையின் ஓவியம் நிறைந்த தூண்களிலும் தார்கொண்டு சில எண்களையும் எழுதியிருப்பதைக்காண எனக்கு இன்னும் வருத்தம் அதிகம். இவ்விதமாக பல பேர்களின் ஒத்துழைப்பினால் சித்தன்னவாசலின் ஓவியப் பொக்கிஷம் குறைந்து போயிருக்கிறது. எஞ்சியிருப்பது சிலவே. எனினும் அவை மிகவும் சிறந்தவை என்று ஓவியவிமர்சகர்கள் சொல்லுகிறார்கள். இதுவும் நமது அதிர்ஷடந்தான். இப்போது சமஸ்தானத்து அதிகாரிகள் வேண்டிய பந்தோபஸ்தைச் செய்து வைத்திருக்கிறார்கள். சமஸ்தானத்து அட்மினிஸ்டிரேடர் இதில் ஒரு விசேஷ அக்கரை எடுத்துக் கொண்டு வருவது திருப்தியைக் கொடுக்கிறது.

பல்லவர்களின் சிற்பத்தைவிட ஓவியந்தான் மேலானது என்பது ஓவிய விமர்சகர்களின் அபிப்பிராயம். அஜந்தா ஓவியத்தை ஒத்த சித்தன்ன வாசல் ஓவியம் பல்லவ ஓவியத்தின் சிகாமணியாய் விளங்குகிறது. அஜந்தா ஓவியத்தைவிட சித்தன்ன வாசலின் ஓவியம் ஒன்றிரண்டு விஷயங்களில் மேலானது. சென்னை மியூசியத்திலுள்ள டாக்டர் எஸ். பரமசிவம் அவர்கள் அஜந்தா குகைகளின் சாந்தையும், சித்தன்ன வாசலின் சாந்தையும் ரசாயன சாஸ்திர முறைப்படி அக்கக்காகப் பிரித்துப் பார்த்தாராம். அப்படிப் பார்த்ததில் சித்தன்னவாசலின் சாந்து அஜந்தா குகைகளின் சாந்தைவிட மிகவும் கெட்டியானது. மற்றும் அஜந்தாவில் சாந்தை ஒரே தடவை பூசி அதன்பேரில் சித்திரம் வரைந்திருக்கிறார்கள். சித்தன்னவாசலில் இரண்டு தடவை சாந்துபூசி அவை நன்றாகக் கெட்டியாக ஒட்டிக்கொண்டதும் அதன்மீது ஓவியத்தைத் தீட்டிகிறார்கள். அஜந்தாவின் சாந்து உமியும் சாணியும் புல்லும் இன்னும் சில பொருள்களும் சேர்ந்தது. அஜந்தாவில் கல் சுவரில் பூசியிருக்கும் சாந்தை விரலால் கிண்டி எடுத்துவிடலாம். அது அவ்வளவு கெட்டியாக இல்லை. ஆனால் சித்தன்ன வாசல் சாந்து மணலினாலும் சுண்ணாம்பினாலும், இரண்டு படையும் செய்தது. முதல் படைச் சாந்தில் பெரும்படியான மணலும், இரண்டாம் படைச் சாந்தில் நொய் மணலும் சேர்ந்திருக்கிறது. மணலும் சுண்ணாம்

பும் சேர்ந்த சாந்தைத்தான் சித்தன்ன வாசலில் உபயோகித் திருக்கிறார்கள். இதைச் சாதாரணமாய் கிண்டி எடுக்கமுடியாது. கெட்டியானது. இது டாக்டர் பரமசிவத்தின் ஆராய்ச்சியின் முடிவு.

சித்தன்ன வாசலில் இரண்டு தடவை சாந்து பூசி பிறகு சித்திரம் எழுதி யிருக்கிறார்கள். அஜந்தாவில் ஒரு தடவை சாந்தைப் பூசி அதன் மீது சுண்ணும்பைத் தடவிப் பிறகு சித்திரம் எழுதி யிருக்கிறார்கள். மேனாட்டிலும் இவ்விதமான சுதைச் சித்திரங்களை வரைந்திருக்கிறார்கள். அவர்கள் சித்தன்ன வாசலில் உபயோகித்தமாதிரி சாந்தை இரண்டு படையாக பூசி யிருக்கிறார்கள். சித்தன்ன வாசலில் சுதைச் சித்திரம் ஐரோப்பாவில் கிரீட் (சென்ற யுத்தத்தில் பிரசித்தி பெற்றிருக்கிறது) எனும் தீவிலுள்ள புராதன சுதைச் சித்திரத்தைப் போன்றது என்று டாக்டர் பரமசிவம் என்னிடம் சொன்னார்.

இங்கிருக்கும் ஒவியங்கள் முதலில் என் கண்ணுக்குப் படவேயில்லை. எல்லாம் மங்கி அழிந்துபோ யிருக்கின்றன. சற்று ஊன்றிப் பார்த்த பிறகுதான் தேவதாஸிகளும், மஹேந்திரவர்மனும் தாமரைக்குள் மங்கையர்களும் நமக்கு மனமுவந்து காக்ஷியளிக்கிறார்கள். இங்குள்ள ஓவியத்தின் விசேஷம் என்னவென்றால் எங்கும் தாமரைப் பூவுக்குத்தான் பெருமை. தூணிலும், மேற்கட்டுகளிலும், போதிகைகளிலும், கொடுங்கைகளின் மீதும் இச் சுதைச் சித்திரங்கள் பதுங்கிக் கிடக்கின்றன. அங்கே உள்ள ஓவியங்களை வெளிமண்டபத்தின் கூரையிலுந்தான் காணலாம். முதலில் வெளிமண்டபத்திலுள்ள சுதைச் சித்திரத்தைக் கவனிப்போம். இது சுமார் 10 அடி நீளமும் 4 அடி அகலமும் இருக்கும். இந்த மண்டபத்தின் கூரையில் இருக்கும் தாமரைத் தடாகத்தின் காக்ஷி நம்மைக் கவர்கிறது. அதில் மலர்ந்த தாமரைகள், மலரும் தாமரைகள், மீன்கள், மலராத மொட்டுகள், இலைகள், மாடுகள், யானைகள், அன்னப் பறவைகள், எருமைகள், மூன்று மனிதர்கள், குளத்தில் தாமரைப் பூ பறித்துக்கொண்டிருக்கும் காக்ஷி: இவை யெல்லாம் மறக்க முடியாதவை. இதில் எல்லாம் இயற்கையாகவே நன்றாய் அமைந்திருக்கின்றன. இந்தக் குளம் ஜைனர்களின் மதக்கொள்கை ஒன்றை விளக்குகிறது. ஜைனர்கள் சமவசரணத்திற்குப் போகும் வழியில் இம்மாதிரிப் பல தடாகங்கள் உண்டாம். அதில் பவ்ய ஜீவன்கள் ஆனந்தமாக தங்களது நேரத்தை இத்தடாகங்களில் புஷ்பங்களிடை, மிருகங்களிடை, நீர் வாழ்வனவுடன் கழித்து சமவசரணத்தை அடைவார்களாம். இந்தக் குளத்திலிருக்கும் மூன்று ஆண் மக்களும் பவ்ய ஜீவன்களாம். அவர்கள் முகத்தில் காந்தியும் அன்பும் பிரகாசிக்கின்றன. இம்

மூவரில் இருவரின் நிறம் கருஞ்சிவப்பு. மற்றவரின் நிறம் பொன் போன்றது.

சதுரமான தூண்களிலுள்ள சித்திரங்கள் உலகப் பிரசித்த மானவை. இச் சித்திரங்களெல்லாம் $1\frac{1}{2}$ அடி சதுரத்திற்கதிகமாயிருக்காது. தூண்களில்தான் இரு நடிகைகளின் படம் இருக்கின்றன. ஒரு நடிகை தன் இடது கையை வெகு அழகாக மேல் நோக்கித் தூக்கி வைத்திருக்கிறாள். இதைத்தான் நாட்டிய சாஸ்திரத்தில் தாண்டவஹஸ்தம் அல்லது லோல ஹஸ்தம் என்பார்கள். அவளுடைய வலது கையை வெகு அழகாக மடித்து அபயமுத்திரை காட்டி நிற்கிறாள். மற்றொரு நடிகையின் இடதுகை அவளது உடம்பின் மேல்பாகத்தின் குறுக்கே பாய்ந்து வெகு அழகாக இயற்கையாகக் கீழே தொங்குகிறது. இதற்குத்தான் கஜஹஸ்தம் என்று பெயர். மற்றொருகையினால் அபயமுத்திரை காட்டுகிறாள். இவ்விரண்டு சித்திரங்களையும் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாது. அவற்றின் அழகே தனிப்பட்டது அவர்களின் கைகளின் வீச்சு, முத்திரை லயம் இவற்றை ஓவியக்காரர் வெகு திறமையாக அழகுடன் சிறிதும் கஷ்டமின்றி வரைந்திருக்கிறார்கள். இவர்கள் அப்ஸரஸ்திரீகளாம். அவர்கள் பலவித ஆபரணங்களை அணிந்திருக்கின்றனர். காதில் ஓலை வளைகளைத்தான் அணிந்திருக்கிறார்கள். அப்ஸர ஸ்திரீகளுக்கு ஓலைதான் அழகு செய்யும்போலும். வைரக்கல்லும் தங்கமும் வேண்டியதில்லை. ஓலையைக் கொண்டு அவர்கள் இஷ்டப்படி தாமே தங்களது உடலை அலங்கரித்துக் கொள்ளலாமல்லவா? தட்டானைத் தேடவேண்டியதில்லையே. தலையில் தாழை மடல்களைச் சித்திரித்து பக்ஷிகளின் வால்கள் மேல் நோக்கி நிற்பது போல் அலங்காரமாக வைத்துக்கொண்டிருக்கிறார்கள் கழுத்தில் மணியும் காசுமாலையும், கையில் கடகமும் மற்றும் பல நகைகளும் அவர்களுக்கு அழகுக்கு அழகு செய்வது போலிருக்கின்றன. இவ்விரு அப்ஸர ஸ்திரீகளை இடுப்பு வரைதான் ஓவியக்காரர் வரைந்திருக்கிறார்கள். அவர்கள் உடலில் துணி என்பதே கிடையாது. அவர்களுடைய உருண்டு திரண்ட அவயவங்களும், கட்டான உடம்பும், முகத்தில் தவழும் ஆனந்தமும், லயம் நிறைந்த தோற்றமும், ஓவியத்தைப் பார்த்தாலே தெரியும்.

மஹேந்திரவர்மனையும் அவனது மனைவியையும் ஓவியக்காரன் தூணின் மற்றொரு பக்கத்தில் தீட்டியிருக்கிறான் மஹேந்திரவர்மன் நல்ல கம்பீரமான தோற்றத்தோடு விளங்குகிறான். மிகவும் வேலைப்பாடமைந்த ஒரு கிரீடத்தைத் தரித்திருக்கிறான். காதில் அப்ஸர ஸ்திரீகளைப்போல ஓலைக் குண்டலங்களை அணிந்திருக்கிறான். இந்த ஓவியத்தை வடநாட்டு ஓவியவிமர்சகரான என். ஸி. மேதா என்பவர் சிவனுடையது என்று தன் புத்தகத்தில் எழுதி

யிருப்பது தவறு. அதற்குச் சிறிதும் ஆதாரமில்லை ஜைனர்களின் குகையில் சிவனுக்கு இடமே இல்லை. மற்றும் அங்கே ஹிந்து மதத்தைச் சேர்ந்த வேறு தேவதைகளுடைய ஓவியம் எதுவும் இல்லை. மஹேந்திரவர்மன் அரசன். அவன் ஜைன சந்நியாசிகளுக் கென்று இக் குகையைக் குடைந்து வைத்தான். ஜைன சந்நியாசி கள் தங்கள் நன்றி யறிதலைக்காட்டவே மஹேந்திரவர்மனின் சித் திரத்தை எழுதி யிருக்கலாம். மேலும் மஹாபலிபுரத்தில் ஒரு குகையில் மஹேந்திரவர்மன் தன் இரு மனைவிகளுடன் கோவி லுக்குப் போவது போன்ற ஒரு உருவம் அங்கே செதுக்கி யிருப் பதை மஹாபலிபுரம் போயிருப்பவர்கள் அறிவார்கள். ஆகவே இந்த ஓவியம் மஹேந்திரவர்மனையும் அவன் மனைவியையும்தான் குறிக்க வேண்டும். என். வி. மேதா கூறுகிற மாதிரி மஹாதேவனை, அதாவது சிவனைக் குறிக்காது. மஹேந்திரவர்மனின் படத்திற் குக் கீழ் 'மஹாதேவ' என்று அவர் தன் புத்தகத்தில் எழுதியிருப் பதும் தவறு.

அர்த்த மண்டபத்தின் நடுவில் கல்லினால் குடைபோன்று கல்லில் வெட்டி யிருக்கிறார்கள். வேறு ஒன்றும் சாதாரணமாகக் கண்ணுக்குத் தெரியாது. அக்குடையைப் பார்த்தபின் என் நண் பர் 'போகலாமே' என்றார். 'சரி' என்று திரும்பினேன். அதுவரை என் கையிலிருந்த டார்ச் லைட்டைப் பற்றி எனக்கு ஞாபகமில்லை. இருந்திருந்தாற்போல் என் கை சேஷ்டை டார்ச் லைட்டின் பித் தானை அழுத்த உள்ளே வெளிச்சம் தெரிந்தது. உடனே மறுபடி யும் டார்ச் லைட் போட்டுப் பார்க்கலாம் என்று சுற்றிப் பார்த் தேன். மேலேயும் டார்ச் லைட்டைத் திருப்பினேன். கல்லினால் செய்த குடைக்குப் பக்கத்தில் உள்ளே கூரையில் நமது பெண்கள் போடும் கோலம்போல் சிலவற்றைத் தீட்டி யிருக்கிறார்கள். இதுவும் நாம் பார்க்கவேண்டியது. நான் கையில் டார்ச் லைட் கொண்டு போயிராவிட்டால் இதை நான் பார்க்காமல்தான் வந் திருக்கவேண்டும் யாராவது 'என்ன ஸார்' 'அர்த்த மண்டபத்தில் ஓவியத்தைப் பார்த்தீர்களா?' என்று வீப்புக்குக் கேட்டால் ஏமாற்றத்துடனும் அசடுதட்டிய முகத்துடனும் 'அங்கே ஓவியம் இருக்கா என்ன' என்று பதில் சொல்லவேண்டி யிருக்கும்.

சித்தன்ன வாசலில் பார்க்கவேண்டியவைகள் இவைதான். எனினும் மலையின் கிழக்குப் பக்கத்தில் ஏழடிப் பட்டம் என்பதை யும் பார்க்கவேண்டும் இதற்குப் போகும் வழி அபாயமானது. அந்த வழியையும் அடைத்துப் பூட்டி வைத்திருக்கிறார்கள். சிறிது தூரத்திற்கு இரும்பு அகழியும் போட்டிருக்கிறார்கள். அங்கே போகும்போதும் காவல்காரன் நம்மோடு கூடவே வருகிறான். இந்த ஏழடிப் பள்ளம் என்பது இம்மலையின் நடுவில் 100 அடி

உயரத்தில் இருக்கிறது. அங்கே மலை ஒரு குடைபோல் மேலே தொங்கிக் கொண்டிருக்கிறது. அங்கிருந்து கால் தவறினால் கீழே தான் விழவேண்டும். விழுந்தால் பிழைப்பது கஷ்டம். இங்கே பாறையில் படுக்கைபோல வழவழப்பாக ஏழு இடங்களில் பாறையை வெட்டி வைத்திருக்கிறார்கள். இந்த விடத்தில் பிராமி எழுத்தில் சில கல்வெட்டுகள் இருக்கின்றன. அவை சமண முனிவர்களின் பெயராம். அவர்களின் பெயர் திருச்சாத்தான், திட்டச் சாணன், திருமுனியன் என்று என்னுடன் வந்த செல்லையா சொன்னார். இந்த ஏழடிப் பட்டத்திலும் குடைபோன்று கவிந்து கொண்டிருக்கும் பாறையில் தாமரைப் பூவின் சித்திரங்களைச் சிறிதும் பெரிதுமாக வரைந்திருக்கிறார்கள்.

சுதைச் சித்திரங்களுக்கு இந்தியாவில் பிரசித்திபெற்ற இடம் வடக்கே அஜந்தாவும், பாக் (Bagh) குகைகளும் ஆகும். தெற்கே லங்கைத்தீவில் சிகியா என்ற ஒரு மலையிலும் சுதைச் சித்திரங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அஜந்தாவை பார்த்த எனக்கு சித்தன்ன வாசலைப் பார்த்தபோது இரண்டுக்கும் நெருங்கிய சம்பந்தம் இருப்பது தெரிகிறது. அத்துடன்கூட இந்தச் சுதைச் சித்திரம் சித்தன்ன வாசல் வழியாக தென் லங்கைக்குச் சென்றிருக்க வேண்டுமென்று தெரிகிறது. சித்தன்ன வாசலில் உள்ள ஓவியங்கள் சிலதான். ஆயினும் அவை தனிச்சிறப்புள்ளவை. இம்மாதிரியே காஞ்சிபுரத்தில் ஸ்ரீ கைலாயநாதர் கோவிலிலும் சுதைச் சித்திரங்கள் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். சித்தன்ன வாசல் தமிழ்நாட்டுப் பண்டை ஓவியச் சிறப்பை விளக்கும் ஓர் ஒப்பற்ற புராதன இடம். ஒவ்வொரு தமிழ்த் தாயின் புதல்வனும் அவற்றைப் பார்த்து இன்புற வேண்டும். பார்த்தால் தமிழ் நாகரீகத்தின் மேன்மையை, கலாசாரத்தின் பரப்பை, நன்கு அறிந்து தானும் ஒரு தமிழன் என்று பெருமை பாராட்டிக் கொள்ளுவான். தமிழ் நாகரீகம், புராதனம், கலாசாரம் இவற்றில் ஆழ்ந்த நம்பிக்கையும் ஏற்படும்.

(அஜந்தாவில் வெளிவந்தது.)

சந்தா நேயர்களுக்கு அறிவிப்பது.

தங்கட்கு 'மும்மணி' முதல் இதழ்களை அனுப்பியுள்ளோம். அதன் பின்னர் கார்டும் எழுதியிருக்கின்றோம். இரண்டாம் இதழ் வெளி வரும் வரையில் எதிர்பார்த்தும் சந்தாதொகை வரவில்லை. ஆயினும் இரண்டாம் இதழும் அனுப்பி யிருக்கின்றோம். பெற்றுக்கொண்டு இம்முறையாவது சந்தா தொகைகளை சீக்கிரம் அனுப்பிக் கொடுக்கவும். போஷகர்களும் போஷக நிதித்தொகையை அனுப்பிக் கொடுக்கவும். மும்மணி ஆசிரியர்.

சிந்தாமணியில் சிறுகதை

தீண்டாமை ஒழிந்தது

வித்வான். S. P. கெம்பீர நைனர்

பெண் குரங்கு, தன் புருஷனை உற்றுநோக்கி, உறுத்துப்பார்த்து, வெறுத்து நிற்கின்றதன்றோ? நிற்கின்ற அக்குரங்கு அங்கேயே அப்படியே சற்றுநேரம் நிற்கட்டும். அதை நிறுத்திவிட்டு, இங்கே தூரத்தில் நின்று கொண்டு துன்பத்தை அனுபவித்து துயருற்றுப் பேசுகின்ற ஆண் குரங்கின் ஆர்வமொழிகளைச் சிறிது ஆழ்ந்து கவனிப்போம்.

"என்னைத் திண்டாதீர்" என்று தீரமாகப் பேசிய தன் மனைவியைப் பார்த்து அவ் வாண்குரங்கு, "மனிதனுடைய உடலில் இருக்கும் உயிர் அவ் வுடலை விட்டு நீங்கி விடுகிறது என்று வைத்துக் கொள். அப்படி உயிர் நீங்கத்தனித்து நிற்கும் உடல் பிணமாகத்தானே ஆகிவிடும்? அதில் ஒன்றும் அய்யமில்லையே உனக்கு!

அது போலவே என் உயிராய் எனக்கு வாழ்நாளாய் என்னுடன் கூடியிருந்த என் மனைவியாகிய நீ இப்போது என்னைவிட்டு நீங்கிவிட்டாய் நீங்கிவிட உடலாய்த்தனித்து நிற்கும் புருஷனாகிய நானும் (உயிராய் இருந்த என் மனைவியாகிய நீ பிரிந்த காரணத்தால்) பிணமாகி விட்டேன் அல்லவா?

அப்படிப் பிணமாகிவிட்ட இவ்விடத்தில், பிணமாகிவிட்ட இதன் பிறகு, பிணமாகிவிட்ட என்னை நீ உற்று நோக்கி அல்லது உறுத்துப் பார்த்து வேண்டியமட்டும் வெறுத்து நின்று என்ன செய்யமுடியும்? என்னதான் செய்யப் போகிறாய்? பாவம்! ஒன்றும் செய்ய முடியாதே! அப்படி நீ பைத்தியக் காரத்தனமாய் எதாவது செய்தாலும் அச் செயல் பிணமாய்விட்ட எனக்கு ஆபத்து எதையும் அணுகவிடாதே! இதை எல்லாம் அறிந்து கொண்டே யான் தைரியமாய் இருக்கின்றேன். நீ வேண்டுமானால் எதையும் நீ நினைத்த எப்படியும் செய்துகொள்.

நான் பிணமாகிவிட்டேன் என்பதை என் உயிராகிய நீ நீங்கிவிட்ட போதே நான் அறிந்து வைத்துவிட்டேன். ஆனால் நீ பேதைப் பெண் பாவம்! நீ தான் அதை இன்னும் அறிந்துகொண்டுவிடவில்லை! ஒன்று செய்வேண்டுமானால், அதாவது நீ சற்று நேரம் இங்கேயே நின்று. கொண்டிரு. அதற்குள்ளாக நான் உண்மையாகவே இறந்து தீர்த்துவிடுவேன். அதன் பிறகாவது நான் இப்போது கூறியவை எல்லாம் உண்மை என்று திண்மையாக நீயும் அறிந்து கொள்வாய்! போய்விடப் போகிறாய் சற்று நின்றிரு! என்ன சொல்லுகிறாய்! என்று பரிகசித்துப் பேசுகின்ற பாவனையாக,

"ஈங்கு இனி என்னை நோக்கி எவன் செய்தி எனக்கு வாழ்நாள்
நீங்கிற்றுச் சிறிது நிற்பின் காண்டியால் நீயும்"

என்று இயம்புகின்றது

இயம்பிய ஆண்குரங்கு இங்கே தன் மனைவியிடம் வருவதற்கு முன்பு தன் காதற்பரத்தையாகிய ஒரு பெண் குரங்கைச் சந்தித்தது. உடனே குறிப்பாக (ஜாடைகாட்டி) அதனைக் கூப்பிட்டது. தான் குறிப்பால் கூப்பிட்ட அதனை எவரும் கண்டு கொள்ளமாட்டார் என்று எண்ணிற்றுப் போலும் அது. ஆனால் பாவம்! அது எண்ணியபடி எவரும் அதைக்

கண்டு கொள்ளாமல் விட்டுவிடவில்லை. அதன் மனைவியாகிய இப் பெண் குரங்கே தன் கண்ணுறக்கண்டு வைத்து விட்டது. ஆனால் தன் மனைவி கண்டுவிட்டது என்பதைத்தான்அவ் வாண்குரங்கு கண்டு வைக்க மறந்து வைத்தது "காதலுக்குக் கண் இல்லை" பாருங்கள்! அதனால் போலும்.

தான் கண்டு வைக்காதகாரணத்தால்தான் மேற்கூறிய கலகம் கொஞ்சம் கடினமாகவே நடக்க நேர்ந்தது. இனித் தன் கணவன் தவறு களைத் தன் கண்ணுறக் கண்டு வைத்திருந்தது என்றாலும் அப் பெண் குரங்கு தன் கணவன் "இறந்து விடுவேன்" என்று இயம்பிய உடன்,

முன்னே தீரமாய் நின்றுகொண்டு "என்னைத் தீண்டாதீர்" என்று தீவிரமாய்ப் பேசித் திண்மையுடன் போர் தொடுத்த தன் திண்மை உள் ளத்தைத் திடீரென்று கைவிட்டுவிட்டது. விடவே, அதன் மனம் இளகி விட்டது. அன்றியும் தன் புருஷனாகிய அக் குரங்கு எங்கு இறந்து விடுமோ என்று எண்ணிய உடன் நடுங்கவும் ஆரம்பித்து விட்டது அதன் பெண் மனம்.

உடனே தன் கணவன் செய்த தவறாகிய மலை தவிடு பொடியாகித் தகர்ந்து விடுகிறது. இப்போது தான் தன் கணவனுடன் கலகம் விளைத்தது தவறு என்று அத் தவறுகளை எல்லாம் தன் தலைமேல் சுமத்திக் கொள்ளு கிறது. அத்தகைய தவறு இழைத்த தன்னைத்தானே பழித்துக் கொள்ளு கிறது. தீண்டிக்கொள்ளக் கூடாது என்று ஒதுக்கித்தள்ளிய கணவனிடம் ஓடித் தழுவிக் கொள்ளுகிறது.

இதனைத்

"தூங்கித்தான் துளங்கமந்தி தொழுந்தையேன் செய்தது என்று
தாங்குபு தழுவிக்கொண்டு தன்னைத்தான் பழித்தது அன்றே"

என்று சிந்தாமணி நமக்குச் செப்பனிட்டுக் காட்டுகிறது.

அதாவது தான் தீண்டிக்கொள்ளக் கூடாது என்று திண்ணமாக எண்ணித் தீரமாக ஒதுக்கி வைத்திருந்த தன் புருஷனை அது பரத்தை யர்த் தோய்ந்த மார்பை உடையது என்பதைப் பார்த்து வைத்திருந்தும் இன்னும் தெண்ணீர் ஆடவில்லை என்பதை தெரிந்து வைத்திருந்தும் தானே ஓடித் தீண்டிக் கொண்டு விட்டதே.

அன்பர்களே, சிறிது ஆழ்ந்து சிந்தியுங்கள் உண்மையில் இப் பொழுது தீண்டாமை ஒழிந்ததா இல்லையா? நீங்களே உரையுங்கள் சாவ தானமாக. ஒழிந்ததுதான் உண்மையில் தீண்டாமை ஒழிந்தது அதுவும் மேலாக ஒழியவில்லை அடியோடு ஒழிந்தது என்று அறை கூவுவீர்கள். அய்யமில்லை யல்லவா?

இனி கலக்காத நிலையில்நின்று தன் கணவனுடன் கடுமையாக வாதம் புரிதற்குக் காரணமான அத்திண்ணிய தீண்டாமை எப்படி ஒழிந்தது?

"பெற்றாற் பெறிற் பெறுவர் பெண்டிர் பெருஞ் சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு" (குறள்)

என்னும் பொன் மொழிப்படித்தான் ஒழிந்தது. அப் பொன்மொழி பொய்யாமொழியன்றோ? அத்தகைய பொய்யாமொழி பொய்க்குமோ? அல்லது உயர்ந்தோர் எத்திடும் உயர்சால் பத்தினிப் பெண்கள்தான் பொய்ப்பார்களா? அவர்களும் பொய்க்கமாட்டார் என்னும் இச் சிறந்த நீதிகள் இரண்டைத்தான் இச் சிந்தாமணியில் சிறு கதை நமக்குச் சித் தரித்துக் காட்டுகிறது.

ஓர் இரவு ** **

வித்வான் வே. லக்ஷ்மணன்

“ அரசன் அவ்வளவு சந்தேகப் பேர்வழியா ? மந்திரியிடம் அவருக்கு நல்ல மதிப்பே கிடையாதா ? ”

“ அப்படி இல்லை ராணி ! காலனைக் காட்டிலும் காலம் கொடியது. அதிலும் இராத்திரி வேளை. ஊரிலோ ஒரே அந்தகாரம். புவிக்குத் தலைவனே இங்கு இல்லாதபோது, நான் இங்கு நிற்பது தகுதியாகுமா? ”

“ சரி, நீங்கள் உங்கள் இஷ்டப்படிதான் செய்வீர்கள் ; என் வேண்டு கோளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. ஏன், அப்படித் தானே ! ”

பிரமிளாவின் சோகமும், சிறிது கோபமும் கலந்த அவ்வார்த்தைகள் அதிரூபனைக் கலக்கிவிட்டன.

கதவைத் தாண்டி உள்ளே, மூதன்முதலாக உள்ள ஒரு மஞ்சத்தில் அமர்ந்தான். பாலும் பழமும் கொடுத்துப் பக்கத்தில் வந்து நின்றாள் பிரமிளா.

மேலும் பேச்சுக்கள் நிகழ்ந்தன.

“ இப்பிறவி எடுத்தது ஒருவிதத்தில் நல்லது என்றே தோன்றுகிறது.”

“ என்ன இன்று இந்தப் புதுமை ! ” என்று வியப்புடன் கேட்டான்.

“ அதிரூபன் அடியாளுடைய கையால் கொடுக்கப்பட்ட பாலும் பழமும் சாப்பிட்டார் என்றால் அதுதானே என் வாழ்க்கையின் குறி.”

“ என்ன சொல்லுகிறீர்கள் ? எனக்கு ஒன்றுமே புரியவில்லையே ! ”

“ பாவம் ! நீங்கள் வெறும் வெள்ளை. இந்திரபோகத்தையும் இடு காட்டு அமைதியையும் ஒன்றாகவே நினைக்கும் அவ்வளவு சாது ! ”

“ ராணி............! ”

“ அமைச்சரே ! நீங்கள் இன்னுமா என்னை அறிந்து கொள்ளவில்லை!”

“ எதை ? ”

“ என் மனோநிலையைத்தான் ” என்று கூறிக்கொண்டே அழகான பூமாலை ஒன்றை அவனுக்குச் சூடப் போனான். பிரேமையினால் விளைந்த துணிவான செயல்தான் இது. ஆனால் உடனே அங்கு நடந்தது அவளுக்குப் பெரிய ஏமாற்றத்தையே அளித்தது.

அதிரூபன் துள்ளி வீழ்ந்தான். “ ஐயோ ! என்ன இது ! ” என்று அலறிவிட்டான். அவனைக் குறை கூறுவதற்கில்லை. பிரமிளாவை அவன் அரசியாக—ஏன்—தாயாகவே நினைத்தான், காரணம் அரசனுடைய பத்தினி என்றல்லவா அவன் கருதி விட்டான் !

அரசனை அவள் இதுவரை விரும்பவில்லை என்பதும், அரசனும் அவளைத் தீண்டவில்லை என்பதும் அவன் அறியாத விஷயம் அல்லவா ?

மாலையையும் கைகளையும் உதறிவிட்டு வெளியே செல்ல முயன்றான், கொடிய ஆபத்திலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்பவன்போல.

ஆனால், அதே சமயத்தில் அரசன் அங்கு வந்து நின்றான். இந்தக் காட்சியையும் அவன் பார்த்துவிட்டான்.

அரசன் எங்கு சென்றிருந்தான் ? அங்கே என்ன நடந்தது என் பதையும் அறியாமல் இருக்கலாமா ?

நகர் சோதனைக்குத்தான் மாறுவேஷத்தில் சென்றிருந்தான். மழையும் இடியும் பலத்ததால் ஒரு வீட்டுத் திண்ணையில் ஒதுங்கி நின்றுகொண்டிருந்தான். "ஒருநாளும் இல்லாதபடி, இன்று இவ்வளவு கொடிய புயலும், செவிடு படுத்தும் இடியும் உண்டாகக் காரணம் என்ன? சப்த மேகங்களும் சேர்ந்து விட்டனவா? ஏதேனும் பெரிய அக்ரமம் நான் செய்துவிட்டேனு? ஊர் முழுதும் நாசமடைந்து விடும்போல் தெரிகிறதே! என்ன விந்தை இது! ஒன்றும் புரியவில்லையே!" என்று கலங்கி நின்ற அவன் காதில் உள்ளேயிருந்து இருவர் பேசும் குரல் கேட்டது.

வாசல் கதவோரத்தில் நின்று செவி கொடுத்துக் கேட்டான்.

"என்ன விபரீதமான மழை இது?" என்றது பெண்குரல்.

"எல்லாம் காரணத்தினுல்தான்" என்று ஆண் குரல் பதில் உரைத்தது.

"ஆ! என்ன காரணம்?" என்று மேலும் ஆவலுடன் கேட்டாள் பெண்.

"நம் அரசன் செய்துகொண்டிருக்கும் அக்கிரமத்தால் தான். அமரசிம்மரைக்கொன்று, அவருடைய பச்சைப் பெண்ணைப் பறித்துவந்து வைத்திருக்கிறுன். நரைத்த கிழவன் இவன். காடு வா, வா என்கிறது; வீடு போ, போ என்கிறது. இவனுக்கு ஆசை வேறே வேண்டுமா?"

இதுவரையிலும்தான் கேட்கமுடிந்தது அரசனுல். தலை சுழன்றது' தான் செய்தது கொடிய பாதகம் என்பது அவன் கல் நெஞ்சத்திலும் தோன்றிற்று. பைத்தியம் பிடித்தவன் போல் ஓடினுன். அவன் அங்கு வந்த சமயமும், அதிரூபன் கையை உதறி எறிந்துவிட்டுக் கிளம்பும் சமயமும் ஒன்ருகவே இருந்தது, விதியின் ஜோடனைதான்!

5

"யார்! அதிரூபனு! எங்கே வந்தாய்!" என்ருன். அதிரூபன் திடுக்கிட்டான். அரசன் மேலே ஒன்றும் கேட்காமல் திரும்பினுன். அதற்குள் பிரமிளா அருகில் வந்தாள்.

"அதிரூபனை ஒன்றும் செய்யாதீர்கள். குற்றவாளி நான்தான்" என்று கூறினுள்.

மாதம் இரண்டாகப் புகைந்து கொண்டிருந்த தீயின்பொறி பறந்தது. அரசனை இன்னும் அதிகம் கலக்கியது.

கிரீடத்தைக் கீழே வைத்துவிட்டு, தலையில் கை வைத்த வண்ணம் நின்ருன் அரசன். அவன் வாயிலிருந்து சில வார்த்தைகள் துள்ளிக் குதிக்கக் காத்துக் கொண்டிருந்தன.

அதற்குள், 'நான் சாகத்துணிந்துவிட்டேன். சாவின் துன்பம்தான் எனக்கு இன்பம். தங்களுடன் வாழும் இன்பமே எனது துன்பம். இதோ தங்கள் கைவாளால் கொன்று, என்னையும் என் தந்தை சென்ற விடத்திற்கு அனுப்பிவிடுங்கள்" என்ருள் அலறிக்கொண்டே, பக்கத்தில் செடிகொடி முதற்கொண்டு பெரிய மரங்கள் எல்லாம் கீழே விழும் சப்தம் கேட்டது. பளிச்சென்று தோன்றி மறைந்தது மின்னல். 'ஓ' என்ற ஆரவாரத்தை இயற்கை எழுப்பிக் கொண்டேயிருந்தது.

அரசன் கண்களினின்றும் சிறு நீர்த்துளிகள் கலங்கி முத்துக்கள் போல உதிர்ந்தன.

"அரசே! தாங்கள் செய்தது பழுத்த பாதகச் செயல். குழந்தையை உங்கள் காதலி ஆக்க நினைத்தீர்கள். குழந்தை அதற்கு இணங்கவில்லை. இறக்கவும் பின்வாங்கவில்லை. கடைசியாக ஒன்று சொல்கிறேன். மறு பிறப்பில் என் காதலன் அதிரூபனை அடைந்து விடுவேன். அப்பொழுதும் உங்களால் குறுக்கே நிற்க முடியுமா?'' என்று சொல்லிக் கொண்டே வாளை எடுத்துத் தன்னை மாய்த்துக் கொள்ள முனைந்தாள் பிரமிளா! அதிரூபன் 'ஓ' என்று அலறினன். "உத்தம கன்னிகைக்கு அகால மரணம் உண்டாகாது'' என்று சொல்வதுபோல் இடியின் நாதம் ஒலித்தது.

அரசன் வெகு விரைவாகச் சென்று, அவள் கைகளினின்றும் வாளை வாங்கிக் கொண்டான்.

"ஏன் தடுக்கிறீர்கள் என்னை?'' என்று சீறினள் அத்தெய்வக்கன்னி

மறுகணமே, அரசன் அளித்த பதில் அவள் முகத்திலே மலர்ச்சியைக் காட்டிற்று!

"இன்றுதான் நான் தூயவன் ஆனேன். என்னை மன்னித்து விடு பிரமிளா...........!

அதிரூபா! நான் இதுவரையிலும் பிரமிளாவைத் தீண்டினதில்லை. ஆனல் ஆசைப்பேய் என்னைப் பிடித்துக் கொண்டிருந்தது. அதுவும் இன்று விலகிவிட்டது.

இந்தா! இவள் என் குழந்தை! ஏற்றுக்கொள்.

இதோ! என் முடி—நீயே தரித்துக்கொள்...................'' என்று கூறி இருவரையும் பார்த்து ஆனந்தத்தை அடைந்தான். மறுகணம் அங்கு அவன் நிற்கவில்லை. அவனுடன் இடியும், மழையும், புயல் முதலிய யாவுமே மறைந்தன.

அரசன் ஓடினதைக் கண்டதும் ஒருவிதக் கலக்கம் உண்டாயிற்று இருவர்க்கும், அரசனின் உருவப்படத்தை எடுத்துவந்து வணங்கினர்கள்.

கீழே உதறி எறிந்த அந்த மாலை மன்னனது உருவப் படத்தின் மீது எறிகின்று அலங்கரித்தது. இருவர்கண்களிலிருந்தும் பெருகிய நீர்த்துளிகள், அரசனிடம் நன்றி மறவாமையைத் தெரிவிப்பனபோல் இருந்தன.

மறு நாளும் விடிந்தது.

அந்த ஓர் இரவின் நிகழ்ச்சியால் ஏற்பட்ட மாறுதல்கள் மக்களுக்கு வியப்பையும் ஆனந்தத்தையுமே தந்தன.

எங்கள் கம்பெனியில் மஹாவீர் ஆபீஸ்காலண்டர், பாக்கெட் காலண்டர், ஹைஸ்கூல், எலிமெண்டரிஸ்கூல் பாடபுஸ்தகங்கள், ஜைந சமய நூல்கள் விற்பனைக்குத் தயாராய் இருக்கின்றன. விவரமறியவிரும்புவோர் கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மஹாவீர் கம்பெனி,

பந்தர்தெரு, மதராஸ் 1.

ஆண்மையும் அறிவும்

யஸஸ்வதி

வானுற ஓங்கி வளர்ந்த ஒரு காடு. அக் காட்டினிடையே அடர்ந்த புதர்களும், நெருங்கிய மரங்களும், படர்ந்த கொடிகளும், வளர்ந்த செடிகளும், மலர்ந்த மலர்களும், கனித்த கனிகளும் அங்குச் சென்றவர்களுடைய மனத்தைக் கவருகின்றன. வண்டினங்களும் தேனீக்களும் அங்குள்ள புஷ்பரசங்களை(மதுவை)உண்டு இனிமையான கீதங்கள் பாடிஞற்போல ஜங்காரம் செய்கின்றன. மான்களும் கவரிகளும் கும்பல் கும்பலாகக் கூடி விளையாடுகின்றன. மயிலினங்கள் நடனஞ் செய்கின்றன. குயில்கள் பஞ்சமத்தொனியினல் பாடுகின்றன. இவ்வியற்கை பொருந்திய காட்டினுள் இயற்கை அன்னையினுடைய அழகையும் அவளது அருளையும் கண்டு களித்து ஓரிடத்தில் தங்கியிருக்கின்ருன் ஜீவகன். இவள் தேவமகளோ! கின்னரியோ! என்று கண்டவர் வியக்கும் கருத்த கூந்தலையும், நெறித்த புருவத்தையும், உருண்ட கண்களையும், நீண்ட நாசியையும், மல்லி அரும்பைப் போன்ற வரிசையான பற்களையும், கோவைக் கனிபோன்ற அதரத்தையும், சங்கை நிகர்த்த கண்டத்தையும், பருத்த ஸ்தனத்தையும், காமனது வில்லுக்கு நாண் கயிறு போன்ற சிறு மயிர்வரிசையுள்ள மார்பினையும், சிறுத்த இடையும், யானை துதிக்கைப் போன்ற தொடையும், தாமரை மலர்போன்ற பாதத்தையும் உடைய கன்னிகை ஒருத்தி நறுமலர்ச் சூடி, மணத்தை வீசும் சுண்ணங்களைப் பூசி, அன்ன நடை நடந்து, அவ் வனத்தினிடையே வருகின்ருள். கண்டாள் ஜீவகனை. காமவெறி கொண்டாள். மயங்கி வீழ்ந்தாள். வெறுத்தாள் கணவனை. அவள் தன்மேகலை ஒளிரும்படி அதன்மீது மூடியுள்ள முந்தானையைக் கையில் பிடித்துக் கொண்டு, புருவத்தை நெளித்து, உடலை அசைத்து, மனத்தை அவனிடம் ஒப்பித்து, காமபரவசத்தைக் காட்டி நின்ருள். வாசனையாகிற தோழியை தனது வாஞ்சையைப் பூர்த்திச் செய்தற்காக ஜீவகனிடம் அனுப்பினுள். ஆபரணங்களின் ஓசையாகிற ஒருத்தியை தனது விருப்பத்தை யாவரும் அறியாமல் ஜீவகனுக்குமட்டும் அறிவித்து வருகவென்று ஜீவகனுடைய செவியினருகிற் செலுத்தினுள். தன் கையிலிருந்த மலரையும் அவன் மீது தூவி,

கடைக்கண்ணுற் நோக்கி, முகத்தை வளைத்து நின்ருள். ஜீவகன், ஓசையையும், ஒளியையும், மணத்தையுங் கண்டு என்ன? ஓர் அதிசயம் என்று திரும்பிப்பார்த்தான். மரத்தினிடையே முன்னும் பின்னும் பார்த்துக் கொண்டிருக்கும் அக் கன்னிகையைக் கண்டான். என்ன இவள் தேவமகளோ! கின்னரியோ! ரம்பையோ! ஊர்வசியோ! என்று வியந்தான். அச்சங்கொண்டான். மனங்கலங்கினன். இவ் விளம்பெண் இங்குத் தன்னந்தனியளாய் வரக் காரணம் என்! என்று பலவாறும் எண்ணித் தவித்துக் கொண்டிருந்தான். அதனைக் கண்ட அவள், தன் மீது அவனுக்கு விருப்பமில்லை என்பதை உணர்ந்தாள். புருவமாகிற வில்லை வளைத்து, கண்ணுகிற அம்பைத் தொடுத்து, மனமாகிற குறியை வைத்து, அருகில் வந்து நின்று, யான் திக்கற்றவள். என்னைக் காப்பாற்றவேண்டுமென்று கூறிய அக் கன்னிகையைக் கண்டான். பின்னும் மனங்கலங்கினன். பாபத்திற் கஞ்சினன். என்னே! பெண்ணின் வாழ்க்கை. கட்டினவனை விட்டு கண்டவரைக் கைபிடிக்க எண்ணங்கொண்டு செய்யாதும் செய்கின்றனர். கண்ணுக்கு மையிட்டு, மயிர் வாரி மலர் அணிந்து, நெற்றிக்குப் பொட்டிட்டு, நல்லாடை அணிந்து, ஆபரணம் பூண்டு ஆடவரைமயங்கச் செய்கின்றனர். உள்ளொன்று நினைத்து, வெளியொன்று பேசி உலோகத்தையே உருகும்படி செய்கின்றனர். மாயையே உருவெடுத்து உலகத்தை மயக்குகின்றனர்.

காதலனைக் கண்டுத் தம்பலம் தின்பேன் என்பர். சாகிறேன் என்பர். என்ன புதுமை! என்ன ஆச்சரியம்! ஐயோ! என்னே பெண்ணின் மயக்கம்! என்னே அறிவற்ற செயல்! என்னே பாதகத் தொழில்! என்னே சுயநலம்! தீயினுக்கும் நீரினுக்கும் அஞ்சார். இப் பெற்றியவரைப் படைத்த பிரம்மனை என்னென்று கூறுவேன்? இவர்களுக்கென அமைந்த அணுக்கள் எவ்வாறிருக்குமோ யான் அறிந்திலேன்?

ஆலகால விஷத்தையும் நம்பலாம்
ஆற்றையும் பெருங் காற்றையும் நம்பலாம்
கோலமாமத யானையும் நம்பலாம்
கொல்லும் வேங்கைப் புலியையும் நம்பலாம்

காலனார் ஏவிய தூதரை நம்பலாம்
கயவர் வேடர் மறவரை நம்பலாம்
சேலைகட்டிய மாதரை நம்பினோர்
தெருவில் நின்று தயங்கித் தவிப்பரே.

என்றபடி பெண்களது உள்ளத்தைக் கவரும் காதலர் உளரோ இல்லை! இல்லை!! ஆகலின் இங்கிருந்து யான் விலகுவேன். ஏகுவேன் வேறிடத்திற்கு. நோக்குவேன் யாக்கையை. என்ன யாக்கையினது தன்மை.

கண்டவருடைய மனத்தைக் கவரும் கட்டழகும், காலன் வந்து கைபிடித்தபோது கண்டவர் கைகொட்டி நகைக்கும் கரிகட்டை போலாகும்.

வேல்கண்ணாள் இவளென்று விரும்பாதீர்கள். அக் கண்ணுடையாளே குனிந்து கூனியாகி கோல் கண்ணாள் ஆகும் காலமும் உண்டு.

பொறிகலங்கி, புலன்மயங்கி, அறிவிழந்து, அதைத் தடுத்து ஈளை உமிழும் இருமல்நோய்கொண்டு எழுந் திருக்கவும்சக்தியற்று பிணிவாயில் அகப்பட்டுத் துன்புறும் காலமு முண்டு.

இளமையில் இச்சைகொண்டு, இனிய வார்த்தைபேசி, இணை பிரியாது, இடையடியே இருந்தவரும், மயிர் நரைத்து முகம்வாடி, பல்விழுந்து, உடல்தளரும் காலத்தில் உற்று நோக்காது ஒழிவர். ஆதலின், இவ் யாக்கையைக் கண்டும் குருடர்போல் அவ்வழகிலேயே மூழ்கிக் கிடப்பவர் உளரோ இல்லை! இல்லை!! யான் செல்வேன் சீக்கிரம். சிந்தனை செய்வேன் வினையை.

வினையாகிற தச்சன் உதிரத்தில் ஊறவைத்த நரம்புகளினால் எலும்புகளைக்கட்டி, அதன்மேல் இறைச்சியை மெத்தி, மெல்லியதோலைப் போர்த்து, மயிரினால் அழகுபட செய்துவைத்த ஒன்பது வாயிலையுடைய இவ் யாக்கையாகிய வீட்டைக்கண்டு, நன்றென்று கொண்டாடும் காதலருக்கே அழகு. உற்று நோக்குகின்றவர்கட்கு அழகன்று. அருவருப்பையே உண்டாக்கும். இவ் வீட்டைச் சமைத்தவன் அல்லவா! சமர்த்தன்.

என்பினை நரம்பிற்பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறந்தோலை போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்திட்
டொன்பது வாயிலாக்கி யூன்பயில் குரம்பை செய்தான்
மன்பெருந் தச்சனல்லன் மயங்கினார் மருள வென்றான்

தமிழ்நாடு ஜைன மாணவர் முதல் மஹாநாடு

(வரவு செலவு கணக்கு விவரம்)

			ரூ.	அ.	பை.
நன்கொடை வசூல்வரவு	1629 8 0	மகாநாட்டிற்காக சாப்பாடு	701	5	1
		சிப்பந்திகள் சாப்பாடு	64	1	0
		அச்சு, ஒலிபரப்பி(வரவேற்பு, தலைவர் உரை முதலியன)	256	12	0
		உருவப்படங்கள் (இரண்டு)	77	8	0
		போக்கு வரவு	71	14	0
		தபால், ஸ்டேஷனரி	61	4	9
		சினிமா கொட்டகை வாடகை	45	0	0
		இதர செலவுகள்	38	11	0
		இருப்பு	313	0	2
	1629 8 0		1629	8	0

சென்னை,
27-7-47

தலைவர்
S. A. ஜைன்

காரியதரிசிகள்
D. அபராஜிதம்
A. தேவதாஸ்

குறிப்பு:—

மஹாநாட்டு சாப்பாட்டுப் பொறுப்பை திண்டிவனம், மஹாவீர ஜைன ஹாஸ்டல் காரியதரிசிகள் ஏற்றுக்கொண்டார்கள். மற்ற மஹாநாட்டு ஏற்பாடுகள் எல்லாவற்றையும் நம் சங்கத்தின் காரியதரிசிகளும் ஸ்ரீ பார்ஸ்மல் ஜைனும் ஸ்ரீ A. சக்கரவர்த்தி B. A. அவர்களும் நடத்தி வைத்தார்கள். யாவரும், தவறுதலை விருப்பின் மன்னித் தருள்வாராக. ஜைன மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக மஹாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களின்படி ஆங்காங்கு ஹாஸ்டல்கள் அமைக்கத் தாராளமாகப் பொருளுதவி செய்யுமாறு யாவரையும் கேட்டுக் கொள்கிறோம்

S. A. ஜைன்
தலைவர்.

1948-ஆம் வருஷத்திய காலண்டர்கள் தயாராகின்றன.

REGISTRAR OF ... 20 AUG 1947 MADRAS

இக் காலண்டருள் இராகு காலம், குளிகை காலம், அமாவாசை, பௌர்ணமி, சஷ்டி, அஷ்டமி, சதுர்த்தசி, முதலிய விரதநாட்களையும், விடுமுறை நாட்களையும் பார்ப்பதற்கு எப்பொழுதும் பாக்கெட்டில் வைத்துக் கொள்ள அனுகூலமாகும். ஆதலின் அனைவரும் இதனை வாங்கிப் பயன் படுத்திக் கொள்க. மஹாவீர் ஆபீஸ் காலண்டர், மஹாத்மா பாக்கெட் காலண்டர், மஹாத்மா ஆபீஸ் காலண்டர் முதலியவைகளும் கிடைக்கும்.

பாக்கெட் காலண்டர் 0 1 0 ஆபீஸ் காலண்டர் 0 12 0

விவரமறிய விரும்புவோர் கீ[illegible]ண்ட விலாசத்திற்கு எழுதி தெரிந்துக் கொள்ளவும்.

வியாபாரிகட்கு 25 0 0 சதவிகிதம் கமிஷன் கொடுக்கப்படும்.

மஹாவீர் அண்டு கம்பெனி,
4, பந்தர் தெரு, :: மதராஸ் 1

Edited, Printed & Published by Sreepala varni at the Mahavir Press, 54, Lingichetty St. Madras.